தலைமைச் செயலகத்தில், நேற்று முன்தினம் (13.07.2023) முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை சிறப்பாக கொண்டாடும் வகையில் அமைக்கப்பட்ட குழுக்களில் "பொலைநோக்குச் சிந்தனையாளர் கலைஞர்" என்ற குழுவின் கூட்டம் இக்குழுவின் தலைவரும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சருமான இ.பெரியசாமி தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் இணைத் தலைவர் சமூக நலன் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி பி.கீதா ஜீவன், ஊரக வளர்ச்சித் துறை மற்றும் ஊராட்சித் துறை அரசு முதன்மைச் செயலாளரும், உறுப்பினர் செயலருமான முனைவர் ப.செந்தில் குமார், உறுப்பினர்கள் நீதியரசர் அக்பர் அலி, கவிஞர் ரவி சுப்பிரமணியன், கவிஞர் மனுஷ்யபுத்திரன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

போக்குவரத்து - சாலை பாதுகாப்பு ஆணையரின்

இணையதளம் முறைப்படி தமிழில் மொழிபெயர்ப்பு!

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்! அமைச்சர் சா.சி.சிவசங்கர் முன்னிலையில்!

சென்னை, ஜூலை.15- போக்குவரத்து மற்றும் சாலைப்பாதுகாப்பு ஆணையரின் இணையதளம் முறைப்படியாக தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுத் தயாரிக்கப்பட்டு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு துவக்கி வைத்தார்.

மாநிலத்தில் உள்ள அனைத்து அரசு துறைகளுக்கான இணையதளங்களை ஆங்கிலத்தில் மட்டுமல்லாமல் தமிழிலும் மொழிபெயர்க்கப்பட வேண்டும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் ஆணையிட்டதற்கு இணங்க போக்குவரத்து மற்றும் சாலைப்பாதுகாப்பு ஆணையரின் இணையதளம் முறைப்படியாக தமிழில் தயாரிக்கப்பட்டு நேற்று பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது.

இந்தத் தமிழ் இணையதளத்தினை முறைப்படி இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேற்று முன்தினம் (13.07.2023) தலைமைச் செயலகத்தில் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு துவக்கி வைத்தார். இந்த நிகழ்சியில் போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், போக்குவரத்து (ம) சாலைபாதுகாப்பு ஆணையர் அ.சண்முக சுந்தரம், மற்றும் தேசியத் தகவல் மையத்தின் மாநிலத் தகவல் இயல் அலுவலர் ஆண்டனி, தேசிய தகவல் மையத்தின் முதுநிலை இயக்குநர் ஈஸ்வரன் உள்ளிட்டவர்களும் கலந்து கொண்டனர்.

மாநிலம் முழுவதும் உள்ள 91 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களிலும், 54 வாகன போக்குவரத்து ஆய்வாளர் அலுவலகங்களிலும் பொதுமக்கள் தங்களது சேவைகளை எவ்வித சிரமமும் இன்றி பெறும் வகையில் 48 சேவைகளை முழுக்கவும் கணினி மயப்படுத்தி ஆன்லைன் மூலமே பெறுவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் முதற்கட்டமாக ஏற்கனவே கீழ்க்கண்ட 6 சேவைகள் இணையதளத்தில் கொண்டு வரப்பட்டு செயல்பாட்டில் உள்ளன.

மேலும் இதனை அடுத்து 42 சேவைகள் ஆன்லைனில் கொண்டு வரப்படும் என்று 2023-24ம் ஆண்டு பட்ஜெட் கூட்டத்தொடரில் போக்குவரத்து துறை அமைச்சர் அறிவிப்பு வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து துறை மூலம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதன் ஒரு பகுதியாக நேற்று முதல் (14.07.2023) கீழ்க்கண்ட 25 சேவைகள் ஆன்லைனில் கொண்டு வரப்படவுள்ளன. மேலும், மீதமுள்ள கீழ்க்கண்ட 17 சேவைகளையும் ஆன்லைனில் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை தேசிய தகவல் மையம் எடுத்து வருகிறது. இந்த பணிகளும் விரைவில் முடிக்கப்படும்.

மேற்கண்ட நடவடிக்கைகள் மூலம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள், வாகன போக்குவரத்து ஆய்வாளர் அலுவலங்கள் ஆகியவற்றில் மக்களுக்கு அளிக்கப்படும் சேவைகளை விரைந்து அளிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இந்த ஆன்லைன் சேவைகளை பொதுமக்கள் பெறுவதற்கு முதலில் தங்களது ஆதார் அட்டையில் உள்ள பெயர், முகவரி உள்ளிட்ட அனைத்து விவரங்களும் அப்டேட்ஆக இருப்பதை உறுதி செய்த பின்னரே உள்ளீடு செய்ய முடியும். விவரங்கள் மாறுபட்டிருந்தால் இந்த ஆன்லைன் சேவையை பெற இயலாது.

எம்.எல்.ஆர். மற்றும் ஓட்டுநர் உரிமம் பெறுவதில் அதிக எண்ணிக்கையில் பொதுமக்கள் வருவதால் விண்ணப்பங்களின் எண்ணிக்கை எந்தெந்த அலுவலகங்களில் அதிகமாக உள்ளதோ அல்லது பெறப்படுகின்றதோ அந்த அலுவலகங்களை சனிக்கிழமை அன்றும் பணியாற்ற உத்தரவிடப்பட்டுள்ளது.

இதுகுறித்து தொடர்புடைய மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மூலம் அந்தந்த மாவட்டத்தில் எந்தெந்த அலுவலகங்கள் சனிக்கிழமை அன்று செயல்படும் என்பது போன்ற அனைத்து விவரங்களை உள்ளடக்கிய விரிவான பத்திரிக்கைச் செய்தியும் வெளியிடப்படும். இந்த வசதியினையும் பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனித் தமிழ் இயக்கத் தந்தை

மறைமலை அடிகளாரின் 148ஆவது பிறந்தநாள் இன்று

"மறைமலை அடிகள் நாகப்பட்டினம் காடம்பாடி என்ற கிராமத்தில் சொக்கநாதர் - சின்னம்மாள் ஆகியோருக்கு 15.07.1876ல் புதல்வராகப் பிறந்தார். பெற்றோர் அவருக்கு வேதாச்சலம் என்று பெயர் சூட்டி அழைத்தனர்.

நாகப்பட்டினம் வெஸ்லியன் மிஷின் கல்லூரி உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியர்கள் பாராட்டும் வகையில் கல்வி பயின்றார். வேதாசலத்திற்கு தமிழ்மேல் ஆர்வம் கொண்டதால் தமிழ்ப்பெரும் புலவர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களின் மாணவர் வெ.நாராயணசாமி பிள்ளை அவர்களிடம் செந்தமிழ் இலக்கிய இலக்கணங்களைக் கற்றுணர்ந்தார்.

தமிழ், வடமொழி,ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளில் உள்ள அரிய நூல்களைக் கற்றுத் தேர்ந்தார்.

சைவச் சான்றோராக இறைநெறி பரப்பியதால் 'சுவாமி வேதாச்சலம்' என்று அழைக்கப்பட்டார்.

1916ஆம் ஆண்டு ஒரு நாள். தான் வாழ்ந்து வந்த பல்லாவரம் இல்லத் தோட்டத்தில், அருமை மகள் நீலாம்பிகை உடன் இருக்க, சுவாமி வேதாச்சலம் அவர்கள், தன் மகள் நீலாவிடம் திருவருட்பா பாடலைப் பாடச்சொன்னார்.

பெற்ற தாய் தனை
மகன் மறந்தாலும்
பெற்ற பிள்ளையை
தாய் மறந்தாலும்
உற்ற "தேகத்தை"
உயிர் மறந்தாலும்
உயிரை மேவிய
உடல் மறந்தாலும்....

...மகள் பாடியதைக் கேட்டதும், சுவாமி வேதாசலம் அவர்களின் உள்ளத்தில் புதிய எண்ணம் ஊற்றெடுத்தது.

"என்ன நீலா! இப்பாடலில் வரும் தேகம் என்பது வடமொழிச் சொல். அது "யாக்கை" என்ற தனித் தமிழ்ச் சொல்லால் அமைந்திருந்தால், பாடலின் தமிழ்ச் சுவை இன்னும் சிறப்பாக இருக்கும்" என்றார்.

உடனே நீலா.. "ஆம், இனி நாம் தனித் தமிழில் பேசவேண்டும் : எழுத வேண்டும் என்றாள். தந்தையும் ஏற்றுக்கொண்டார்.

முதலில் சுவாமி வேதாசலம் என்ற தன் பெயரை... 'வேதம்' என்றால் மறை 'அசலம்' என்றால் மலை 'சுவாமி' என்றால் அடிகள் தூய தமிழில் "மறைமலை அடிகள்"என்று மாற்றிக் கொண்டார்.

தான் நடத்தி வந்த 'ஞானசாகரம்' என்ற இதழின் பெயரை அழகு தமிழில் "அறிவுக் கடல் " என்று மாற்றினார். அன்றே தனித் தமிழ் இயக்கம் தோன்றியது என்று கூறலாம்.

தான் எழுதிய நூல்களில், ஆற்றிய சொற்பொழிவுகளில் தனித் தமிழைக் கையாண்டார்.

அதன் பயனாக... நமஸ்காரம் ... வணக்கம் ஆனது அக்ராசனர் ... தலைவர் பொக்கிஷதார் .... பொருளாளர் ஜலம் .... தண்ணீர் - சந்தோஷம் .... மகிழ்ச்சி ஆனது

தமிழ்த்தாய், தமிழர்மதம், அறிவுக் கொத்து பண்டைத் தமிழரும் ஆரியமும், சாதி வேற்றுமையும் போலிச் சைவமும், பொருந்திய உணவும் பொருந்தாத உணவும், மக்கள் நூறாண்டு வாழ்வது எப்படி ? போன்ற (60க்கு மேற்பட்ட) சிறந்த நூல்களைத் தனித் தமிழ் இயக்கத் தந்தை மறைமலை அடிகள் படைத்துள்ளார்கள்.

வரலாற்றில் மறைக்கப்பட்ட தமிழன் பெருமையை நிலைநாட்டும் வகையில் தமிழனுக்கு என்று திருவள்ளுவர் தொடராண்டினை 1921 ஆம் ஆண்டு உருவாக்கி தமிழ்கூறும் நல்லுலகிற்கு அறிவிக்க பெரும் பங்காற்றிய தமிழறிஞர்களில் முதன்மையானவர் தனித் தமிழ் இயக்கத் தந்தை மறைமலை அடிகள் ஆவார்.

1938 ஆம் ஆண்டு தமிழ்நாட்டுப் பள்ளிகளில் இந்தி திணிக்கப்பட்டபோது தந்தை பெரியாருடன் இணைந்து மறைமலை அடிகள் இந்தி திணிப்பு எதிர்ப்புபோராட்டங்களை தலைமைஏற்றுநடத்தியவர்.

1911 ஆம் ஆண்டு சென்னை பல்கலைக் கழகம் ஆங்கிலம், வடமொழி சமசுகிருதம் கட்டாய பாடம். தமிழ் மொழி விருப்பப் பாடம் என்று கொண்டு வந்ததைக் கண்டித்து, பதினாறு ஆண்டுகளாக பணியாற்றிய பேராசிரியர் பதவியை தூக்கி எறிந்து விட்டு வெளியேறிய தமிழ்மொழிக் காவலர் மறைமலை அடிகள் ஆவார்.

க.வை. இராமகிருட்டிணன்
செயலர்
அய்யன் திருவள்ளுவர் இலக்கிய மன்றம்
மதுரை

தமிழ்க் கடல் மறைமலை அடிகள் 1950 ஆம் ஆண்டு செப்டம்பர் 15 ஆம் நாள் தன் 75 வயதில் இயற்கை எய்தினார்கள்.

முத்தமிழ் அறிஞர் முதல்வர் கலைஞர் அவர்கள், மறைமலை அடிகளாரின் நூல்களை அரசுடமை ஆக்கி, அவர்தம் மரபுரிமையினருக்கு ரூ. 15 இலட்சம் வழங்கியதுடன் 2007 ஆம் ஆண்டு மறைமலை அடிகளின் அஞ்சல் தலையும் வெளியிடச் செய்து பெருமைப்படுத்தினார்கள்.

மறைமலை அடிகளின் அடியொற்றி தனித் தமிழ் இயக்கத்தை வளர்த்த சான்றோர்களில் முதன்மையானவர் "திராவிட மொழி ஞாயிறு" தேவநேயப் பாவாணர் ஆவார்.

தமிழ்நாட்டில் ஞாலத்தை வென்ற புலமை பெற்ற நால்வரில் (1.தொல்காப்பியர் 2.திருவள்ளுவர் 3.கால்டுவெல் 4.மறைமலை அடிகள்) ஒருவர் தனித் தமிழ் இயக்கத் தந்தை மறைமலை அடிகள் என்று புகழ்ந்துரைத்தவர் தேவநேயப்பாவாணர் ஆவார்.

தமிழ்க் கடல்மறைமலை அடிகள் பிறந்த நாளில் ஒவ்வொரு தமிழனும் தூய தமிழில் பேசிடவும் - எழுதிடவும் உறுதி ஏற்போம்! தனித் தமிழ் இயக்கத் தந்தை மறைமலை அடிகளாரின் புகழ் நீடு வாழ்க!

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு - மூன்று நாட்கள் நடைபெறுகிறது!

தமிழ்நாடு இயல் - இசை - நாடக மன்றம் சார்பில் நாட்டிய விழா!

அமைச்சர் மு.பெ.சாமிநாதன் - திருச்சி சிவா எம்.பி. சிறப்புரை!

தலைமை: வாகை சந்திரசேகர்! முன்னிலை: விஜயா தாயன்பன்!

சென்னை, ஜூலை 15- தமிழ்நாடு இயல் - இசை - நாடக மன்றம் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நாட்டிய விழா நடைபெறுகிறது.

ஜூலை 14,15,16 (வெள்ளி சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை) ஆகிய நாட்களில் சென்னை - இராஜா அண்ணாமலை புரம் முத்தமிழ்ப் பேரவை திருவாவடுதுறை இராஜரத்தினம் கலையரங்கில் இவ் விழா நடைபெறுகிறது.

15.7.2023

15.7.2023 - சனிக்கிழமை மாலை 5.30 மணி அளவில் தொடங்கும் விழாவில் - இயல், இசை, நாடக மன்ற உறுப்பினர் செயலர் திருமதி விஜயா தாயன்பன் வரவேற்புரையாற்றுகிறார்.

தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத் தலைவர் வாகை சந்திரசேகர் தலைமை வகிக்கிறார்.

மயிலை த.வேலு எம்.எல்.ஏ. முன்னிலை வகிக்கிறார்.

மூத்த நாட்டியக் கலைஞர் கலைமாமணி நந்தினி ரமணி, முத்மிழ்ப் பேரவைத் தலைவர் ஜி.இராமானுஜம் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

விழாவில் - கலை மாமணி பார்வதி ரவி கண்ட சாலா குழுவினரின் 'காவியக் கவிதைகள்' நாட்டிய நிகழ்ச்சி நடைபெறுகிறது.

16.7.2023

16.7.2023 - ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்குத் தொடங்கும் விழாவில் - தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்ற உறுப்பினர் - செயலாளர் திருமதி விஜயா தாயன்பன் வரவேற்புப் பேசுகிறார்.

தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத் தலைவர் வாகை சந்திரசேகர் தலைமை வகிக்கிறார்.

மயிலை த.வேலு எம்.எல்.ஏ. முன்னிலை வகிக்கிறார்.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் விழாப் பேருரையாற்றுகிறார்.

சென்னை - சிதம்பரம் அகாடமி ஆஃப் பெர்பார்மிங் ஆர்ட்ஸ் நிறுவனர் திருமதி சித்ரா விஸ்வேஸ்வரன் வாழ்த்துரை வழங்குகிறார்.

விழாவில் - கலை மாமணி முத்தரசி ரவியின் கலைக்கோயில் நாட்டியப் பள்ளி வழங்கும் - முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 'சங்கத் தமிழ்' இசை நாட்டிய நாடகம் நடைபெறுகிறது.

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில், கோணம் அரசினர் தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் பொதுப்பணித்துறை டாடா டெக்னாலஜிஸ் நிறுவனத்துடன் இணைந்து ரூபாய் 34 கோடியே 65 லட்சம் செலவில் புதிதாக கட்டி முடிக்கப்பட்டுள்ள 4.0 தொழில்நுட்ப மையம் கட்டிடத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொளிக் காட்சி மூலம் திறந்து வைத்தார். அதைத்தொடர்ந்து புதிதாக கட்டி முடிக்கப்பட்டுள்ள தொழில் 4.0 தொழில்நுட்ப மையத்தினை திறந்து வைத்ததற்காக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு குமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் குத்துவிளக்கேற்றி நன்றி தெரிவித்தார். இதில் அரசு அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

எதிர்க்கட்சிகள் ஓரணியில் திரள்வதால்

பா.ஜ.க.வின் தூக்கம் தொலைவது உறுதியாகிவிட்டது!

'தினகரன்' நாளேடு தலையங்கம்!

தினகரன்
ஜூலை 14, 2023 வெள்ளிக்கிழமை
ஒற்றுமை விருந்து
இந்திய பாஜ அரசின் அராஜகப்போக்கை தடுத்து நிறுத்தி ஜனநாயகத்தை மீட்டெடுக்கும் முயற்சியில் திமுக, காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் ஈடுபட்டுள்ளன. அதன்படி அடுத்த ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில் அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைந்து பாஜவை எதிர்கொள்ள திட்டமிட்டுள்ளது பீகார் மாநில முதல்வர் நிதிஷ்குமார் ஏற்பாடு செய்த எதிர்க்கட்சிகளின் முதல் ஒற்றுமை கூட்டம் பாட்னாவில் கடந்த மாதம் 23ம் தேதி நடந்தது. இதில் தமிழ்நாட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின், காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல், காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, மேற்குவங்க முதல்வர் மம்தாபானர்ஜி, டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் உள்ளபட 15 கட்சிகளின் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை, ஜூலை 15 - எதிர்க்கட்சிகள் ஓரணியில் திரள்வதால் பா.ஜ.க. வின் தூக்கம் தொலைவது உறுதியாகிவிட்டது என்று 'தினகரன்' நாளேடு தலையங்கம் வெளியிட்டுள்ளது.

அது வருமாறு:-

பா.ஜ. அரசின் அராஜகப் போக்கை தடுத்து நிறுத்தி ஜனநாயகத்தை மீட்டெ டுக்கும் முயற்சி யில் தி.மு.க., காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் ஈடுபட்டுள்ளன. அதன்படி அடுத்த ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில் அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைந்து பா.ஜ.வை எதிர்கொள்ள திட்டமிட்டுள்ளது. பீகார் மாநில முதல்வர் நிதிஷ்குமார் ஏற்பாடு செய்த எதிர்க்கட்சிகளின் முதல் ஒற்றுமை கூட்டம் பாட்னாவில் கடந்த மாதம் 23ம் தேதி நடந்தது. இதில் தமிழ்நாட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின், காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல், காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, மேற்குவங்க முதல்வர் மம்தாபானர்ஜி, டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் உள்ளபட 15 கட்சிகளின் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

ஒன்றிய பா.ஜ. அரசை ஆட்சியில் இருந்து அகற்ற வேண்டும் என்பதே இந்த ஒற்றுமை கூட்டத்தின் முக்கிய நோக்கமாக விவாதிக்கப்பட்டது. இதைதொடர்ந்து அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து ஆலோசிக்க பெங்களூருவில் எதிர்க்கட்சிகள் ஒன்றிணையும் ஒற்றுமை கூட்டம் வரும் 17, 18 தேதிகளில் நடக்கிறது. இதில் காங்கிரஸ் முன்னாள் தலைவர் சோனியாகாந்தி பங்கேற்கிறார். அதற்காக 17ம் தேதி இரவு பெங்களூருவில் எதிர்க்கட்சி தலைவர்களுக்கு விருந்து அளிக்கிறார். பின்னர் 18ம் தேதி அனைவரும் ஒன்றிணைந்து ஆலோசனை நடத்துகின்றனர். இதற்காக 24 எதிர்க்கட்சி தலைவர்களுக்கு சோனியா அழைப்பு விடுத்துள்ளார்.

ஒன்றிய பா.ஜ. அரசு அமலாக்கத்துறை, சி.பி.ஐ. ஆகியவற்றை எதிர்க்கட்சிகளுக்கு எதிராக பயன்படுத்தி முடக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. அமலாக்கத்துறைக்கு வானளாவிய அதிகாரங்களை வழங்கி, பா.ஜ. ஆட்சி அல்லாத மாநிலங்களை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர வருமான வரி சோதனை, கைது நடவடிக்கை, விசாரணை என்று அச்சுறுத்தலை நடத்தி வருகிறது. எதிர்க்கட்சிகளை குறி வைத்து ஒடுக்கும் முயற்சியில் பா.ஜ. பகிரங்கமாகவே களமிறங்கியுள்ளது. இந்நிலையில் ஜி.எஸ்.டி. தொடர்பான வழக்குகளை விசாரிக்க அமலாக்கத்துறைக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இதனால் தங்களுக்கு அடி பணியாத வியாபாரி கள், தொழிலதிபர்களுக்கு மிரட்டல் விடுக்கும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இப்படி நாட்டின் ஜனநாயக மரபுகளை குழிதோண்டி புதைக்கும் வகையில் நடந்து கொள்ளும் ஒன்றிய பா.ஜ.வுக்கு எதிராகவும், நாடு எதிர்கொண்டுள்ள சவால்களை சமாளிக்க அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்ற நோக்கில் நடக்கும் எதிர்க்கட்சிகளின் ஒற்றுமை கூட்டம் முக்கியத்துவம் பெற்றுள்ளது. இந்த கூட்டத்தில் எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைப்பாளர், கூட்டணியை கட்டுக்கோப்பாக வழிநடத்தி செல்ல செயற்குழுக்கள் அமைப்பது, ஒற்றுமை பேரணி, மாநிலங்களில் போராட்ட இயக்கம் அமைத்தல் ஆகியன குறித்து தீர்மானித்து முடிவு எடுக்கப்பட இருக்கிறது.

எதிர்க்கட்சிகள் தங்களுக்குள் எந்த மனக்கசப்புக்கும், கருத்து வேறுபாடுக்கும் இடம்கொடுக்கா மல் ஒன்றிய பா.ஜ. அரசை அகற்றுவது ஒன்றே லட்சியமாக செயல்பட வேண்டும். முதல் கூட்டத்தில் டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் காங்கிரஸ் மீது அதிருப்தி வெளிப்படுத்தினார். எனவே அவரது ஆம் ஆத்மி கட்சி பெங்களூரு கூட்டத்தில் பங்கேற்குமா என்ற கேள்வி எழுந்துள்ளது. எப்படியோ எதிர்க்கட்சிகள் ஓரணியில் திரண்டுள்ளதால் பா.ஜ.வுக்கு அச்சம் ஏற்பட்டுள்ளது. எதிர்க்கட்சிகளின் ஒற்றுமை விருந்தால் பா.ஜ.வின் தூக்கம் தொலைவது உறுதி என அரசியல் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு 'தினகரன் நாளேடு தலையங்கம் தீட்டியுள்ளது.